# ஏன் ?

## தமக்காக தன் ஜீவனைக் கொடுத்தவருடைய அன்பை ஏன் மக்கள் ஏற்க மறுக்கிறார்கள் ? நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்.

**நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்: யார் நீதிமான் (பாவமில்லாதவர்கள்) ?**
**யாருமில்லை.**

* ரோமர் 3:10 "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.'

**நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்: யார் பாவம் செய்தவர்கள் ?**
**எல்லோரும்.**

* ரோமர் 3:23: 'எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,'

**நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்: பாவத்திற்கு கடவுளின் தண்டனை என்ன ?**
**மரணமும் நரகமும்.**

* எபிரெயர் 9:27: "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,"
* ரோமர் 6:23a: "பாவத்தின் சம்பளம் மரணம்."

**இது இரண்டாவது மரணம்.**

* வெளிப்படுத்தின விசேஷம் 20:14,15,10b "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.
ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.

**நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்: எனது பாவத்துக்குப் பரிகாரமாக நான் ஏதும் செயல்கள் (கருமங்கள்) செய்யமுடியுமா ?**
**முடியாது.**

* எபேசியர் 2:8,9 "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்: இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு: ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல:
* ரோமர் 6:23 "பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."

**நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்: நான் மீட்கப்பட ஏதாவது வழி உண்டா ?**
**உண்டு.**

* யோவான் 14:6 "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."
* அப்போஸ்தலர் 4:12 "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை: நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."
* 1 தீமோத்தேயு 1:15 "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது: அவர்களில் பிரதான பாவி நான்."

**நீங்களே உங்களைக் கேட்டுப்பாருங்கள்: இந்த இரட்சிப்பைப் பெற நான் என்ன செய்யவேண்டும் ?**
**பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுவை விசுவாசித்து, ஒப்புக்கொடுத்து ஏற்றுக்கொள்ளுங்கள்.**

* **லூக்கா** 13:3 "**நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.**"
* **லூக்கா** 18:13b "**பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்.**"
* **அப்போஸ்தலர்** 16:31 "**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.**"
* **யோவான்** 1:12 "**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.**"
* **ரோமர்** 10:9,10 "**என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.**"

(* வேதத்தில் காணப்படுவது.)

அன்பான வாசகர்களே, கடவுள் உங்கள் இருதயத்திலே பேசினால், இப்படியாக நீங்கள் இப்பொழுதே ஜெபியுங்கள்.:
”ஆண்டவராகிய இயேசுவே, நான் பாவி என்றும் எனக்கு இரட்சகர் தேவை என்றும் ஒப்புக் கொள்கிறேன். நீர் எனக்கு ஆண்டவராகவும் இரட்சகராகவும் இருந்து எனக்கு பாவமன்னிப்பை அருளும். நீரே, நீர் மட்டுமே எனக்கு இரட்சகர் என்று நம்புகிறேன். நீர் சிலுவையில் பாடுபட்டு மரித்து, என்னுடைய பாவங்களுக்கு முழு பிராயச்சித்தம் செலுத்தி, எனக்குப் புது வாழ்வு கொடுக்க, மீண்டும் உயிர்த்தெழுந்து ஜீவிக்கிறீர். என்னை இரட்சித்ததற்காக நன்றி.

நீங்கள் உங்கள் முழுமனதோடு, இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்று உணர்ந்தால், வேதத்தின் அடிப்படையில் உள்ள ஒரு திருச்சபைக்கு நீங்கள் சென்று அவர்களோடு ஐக்கியம் கொள்ளுங்கள். அது நீங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு வளர உதவும்.

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், எங்களை அனுகவும்:

**தமிழ் கிறிஸ்தவ ஜெப தேவாலயம்**
Tamil Christian Prayer Church
25 Sewells Road
Scarborough, Ontario
M1B 3H2 Canada.
905-820-9323
www.tcpc.ca

*(Ref: ww27. Evengelical Tract Distributors. www.evangelicaltracts.com)*